திரு. ரா. ரா. முனுசாமி: தமிழ் நாட்டிலுள்ள மத்தியச் சிறைகளில், சென்னை, வேலூர், திருச்சி, மதுரை போன்ற பெரிய ஜெயில்களில் அன்றாடம் திரைப்படக் காட்சிகளை ஒரு மணி நேரமாவது அங்குள்ள கைதிகளுக்குப் போட்டுக் காண்பிக்க அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாள்தோறும் காட்டுவது என்பது முடியாத காரியம். எல்லோரும் சிறைச்சாலைக்குச் சென்று அங்கு அதை ரசிக்க வேண்டுமென்று நாங்கள் கருதவில்லை. மாறாக அதிக வாய்ப்புகள் கொடுக்க வேண்டும். எல்லாச் சிறைசாலைகளுக்கும் என்ற கருத்தைத்தான் அரசு செயல் படுத்தி வருகிறது.

சருக்காம்பாறை நீர்த்தேக்கம்

*94. வினா—திரு. ஜி. ராமசாமி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், ஏலகிரி மலையில் இருந்து வரும் சருக்காம் பாறை ஆற்றில் நீர்த்தேக்கம் கட்டும் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம்.

(இ) இத் திட்டம் தீவிர ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. ஜி. ராமசாமி: இந்த சருக்காம்பாறை நீர்த்தேக்கத் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு? அது எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இத் திட்டத்தினால் 107 ஏக்கர் புன்செய் நிலம் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மதிப்பீடு சுமார் நான்கு லட்சம் ரூபாய் ஆகும். அங்கு ஒரு டன் உற்பத்தியாகும் செலவு அதிக மாகயிருப்பதால் இத் திட்டத்தை மறுபரிசிலனை செய்யும்படி மேற்பார்வை பொறியாளர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. எம். ஏ. லத்தீப்: இந்த சருக்காம்பாறை அணைத் திட்டத்தோடு சேர்க்கப்பட்ட இணைப்புள்ள மற்ற திட்டங்கள் பரிசிலனையில் உள்ளனவா? அவைபற்றி அதிகாரிகளின் ஆய்வுரை கிடைத்துவிட்டதா? அப்படியானால் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இத் திட்டத்தோடு சேர்ந்த மற்ற திட்டங்கள் பற்றி குறிப்புகள் அனுப்பக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக் கிறார்கள். அந்தக் குறிப்புகள் வந்த பிறகு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.